Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 245/2025**

Preliminary Register

Deposition of **PW- 1 LW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குணசீலன் | Father Name | : | கனகராஜ் |
| Village | : | உத்தமதானபுரம் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | கல்லூரி |
| Religion | : | | Age | : | 19 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 16th day of February 2026.

1 முதல் 3ம் எதிரிகள் ஆஜர். 1 முதல் 3ம் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து கல்லூரியில் படித்து வருகிறேன். சம்பவ காலத்தில் நான் பிபிஏ பட்டப்படிப்பு 3ம் ஆண்டு படித்துவந்தேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது பக்கத்துவீட்டுக்காரர்கள். கடந்த 09.05.2025ம் தேதி உத்தமதானபுரம் வடக்கு தெருவில் எனது தம்பி ரமேஷ் நடந்து வந்துகொண்டிருந்தபோது எதிரி அருணாச்சலம் எனது தம்பியை மோதிவிட்டு நிற்காமல் ஓடிவிட்டார். என் தம்பி சொன்னதை கேட்டு நானும் என் தம்பியும் மறுநாள் எதிரி அருணாச்சலம் வரும் செல்லியம்மன் கோவிலில் நின்றுகொண்டிருந்தோம். அப்போது இரவு 07.00- . 08.00 மணி இருக்கும். அங்கு வந்த எதிரி அருணாச்சலம் என் தம்பியை இடித்துவிட்டு மன்னிப்பு கூட கேட்காமல் ஏன் சென்றீர்கள் என்று கேட்டேன்.

அதற்கு அவர் என்னை குச்சிகாரி மகனே, தேவுடியா மகனே என்று என்னை திட்டினார். அதன் பின்பு உனக்கு ஒருநாள் இருக்குடா என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். அதன்பிறகு திருவிழா முடிந்து மஞ்சள் நீராட்டு விழா 16.05.2025 அன்று நடந்தது. அன்று நள்ளிரவு 12.30 மணியளவில் சாமி ஊர்வல வாகனத்திற்கு டீசல் வாங்கி கொடுத்துவிட்டு வந்தபோது எதிரிகள் அனைவரும் எனது தம்பியை வழிமறித்து குச்சிகாரி மகனே, தேவிடியா மகனே என்று எனது தம்பியை திட்டி இங்க வாடா என்று எனது தம்பியின் சட்டையை பிடித்து கேட்டனர். அப்போது நான் ஏன் எனது தம்பியை திட்டுகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் நீ என்ன பெரிய ஆளு புண்டையா என்று என்னை திட்டி எதிரி அருணாச்சலம் கையில் வைத்திருந்த கத்தி போன்ற ஆயுதத்தினால் எனது முகத்தின் இடது புறத்திலும் எனது வலது கையிலும் கீறினார்.(சாட்சி தனக்கு முகத்திலும் கையிலும் ஏற்பட்ட தழும்பினை நீதிமன்றத்தில் காண்பிக்கிறார்). எதிரி தாக்கியபோது ஆயுதத்தை கைக்குள் மறைத்து வைத்திருந்ததால் சரியாக என்னால் பார்க்கமுடியவில்லை. கத்திபோன்றுதான் இருந்தது. அப்போது எனது தம்பி தடுக்க வந்தபோது அவரது இடுப்பிலும் 1வது எதிரி அருணாச்சலம் ஆயுதத்தால் கீறியதில் அவருக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டு தற்போது தழும்பாக உள்ளது. எதிரி வெற்றிவேல் கீழே கிடந்த கட்டையை எடுத்து எனது வலது காலில் அடித்தார். எதிரி ராம்குமார் எனது தம்பியின் முதுகில் கட்டையால் அடித்தார். சத்தம் போட்டோம். இரத்தகாயம் ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் வந்துவிட்டனர். அப்போது எதிரிகள் என்னைக்கா இருந்தாலும் உங்களை விடமாட்டேன். உங்கள் சாவு எங்க கையில்தான் என்று மிரட்டிவிட்டு அந்த இடத்தை விட்டு ஓடி விட்டார்கள். பின்னர் எனது அப்பா எனது சகோதரர்கள் உதவியால் நானும் எனது தம்பியும் பாபநாசம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். பின்னர் மேல் சிகிச்சைக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சேர்ந்தோம். அங்கு சுமார் 1 வார காலம் சிகிச்சையில் இருந்தோம். சிகிச்சையில் இருந்தபோது போலீசார் எங்களை விசாரித்தனர். புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்களை நான் சொல்ல சொல்ல

எழுதிக்கொண்டார்கள். என்னிடம் படித்து காண்பித்தார்கள் சரியாக இருந்தது. பின்னர் கையொப்பம் செய்தேன். புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

நானும் ஆஜர் எதிரிகளும் வெவ்வேறு சாதியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். உத்தமதானபுரம் கிராமத்தில் எங்கள் சாதியை சேர்ந்தவர்கள்தான் அதிகம் என்றால் சரிதான். எங்கள் தெருவிற்கும் ஆஜர் எதிரிகளின் தெருவிற்கும் சாதிய பாகுபாடு உண்டு என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளை விட நாங்கள் உயர்ந்த சாதி என்றால் சரிதான். கோவில் தேரோட்டம் நடைபெறும்போது வழக்கமாகவே இரு பிரிவினருக்கும் பிரச்சனை ஏற்படும் என்றால் சரிதான். குறிப்பாக தப்பாட்டம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்போது பிரச்சனை ஏற்படும் என்றால் சரிதான். எங்கள் தெருவிற்கும் ஆஜர் எதிரிகளின் தெருவிற்கும் இடையே சுமார் 500 மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் என்பது ஆஜர் எதிரிகளின் தெரு என்றால் சரிதான். தேரிழுக்கும் நிகழ்ச்சியின்போது சுமார் 80 நபர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். ஆஜர் 1ம் எதிரி அருணாச்சலம் அவர்கள் தெருவின் நாட்டாமை பொறுப்பில் உள்ளார் என்றால் சரிதான். ஆஜர் 1ம் எதிரியின் தெருவில் அவரது தலைமையில்தான் தேரிழுத்து செல்வார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, நாங்கள் தேரினை மெயின்ரோட்டிலே அவர்களிடம் கொடுத்துவிட்டு சென்றுவிடுவோம், அவர்கள் தெருவிற்குள் செல்லமாட்டோம். நாங்கள் தேரினை மெயின்ரோட்டிலே அவர்களிடம் கொடுத்துவிட்டு சென்றுவிடுவோம், அவர்கள் தெருவிற்குள் செல்லமாட்டோம் என்றால் சரிதான். சாமி விஷயமாக ஏதாவது தேவைபட்டால் கோவில் நிர்வாகிகள் மட்டும்தான் அவர்கள் தெருவிற்குள் சென்று கேட்பார்கள் என்றால் சரிதான். நாங்கள் செல்லமாட்டோம் என்றால் சரிதான். திருவிழா தினத்திற்கு மறுதினமான மஞ்சள் நீராட்டு விழாவின்போது தான் சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். அப்போது அங்கு சாமி ஊர்வல வாகனத்தின் மின்விளக்கு வெளிச்சம் இருந்தது என்றால்

இல்லை. இருட்டாக இருந்தது. அப்போது ஆஜர் எதிரிகளின் தெருவில் தப்பாட்ட நிகழ்வும் நடைபெற்றது என்றால் சரிதான். எனது தம்பி அபிஷேக்கும் அவருடைய நண்பர்கள் 10 பேருடன் ஊர்வல வாகனத்திற்கு டீசல் கொடுக்க சென்றார்கள் என்றால் இல்லை எனது தம்பி மட்டும்தான் சென்றார். நானோ எனது தந்தையோ சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் அப்போது மெயின்ரோட்டிலிருந்து சாமி ஊர்வலத்தை பார்த்துக்கொண்டிருந்தோம். நான் கொடுத்த புகாரிலும் எனது வாக்குமூலத்திலும் நானும் எனது தம்பியும் சம்பவயிடத்தில் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது வாக்குமூலத்தில் நானும் எனது தம்பியும் சம்பவயிடத்தில் இருந்தோம் என்று சொல்லவில்லை. மேற்படி போலீசார் எழுதிய வாக்குமூலத்தில் நான் கையொப்பம் மட்டும்தான் செய்தேன் என்றால் சரிதான். போலீசார் எழுதிய வாக்குமூலத்தை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் நின்று கொண்டிருந்த ரோட்டிற்கும் தேர் வந்துகொண்டிருந்த இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 50 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவயிடமானது இருட்டாக இருந்தது என்றாலும் நான் நின்ற தொலைவிலிருந்து மேற்படி சம்பவத்தை பார்க்க முடியாது என்றாலும் சரியல்ல. எனது அப்பாவோ மற்ற சாட்சிகளோ சம்பவயிடத்தில் இல்லை என்றால் சரிதான். எனது தம்பி மற்றும் அவருடைய நண்பர்கள் 15 பேர் சென்று எங்கள் தெருவில் தப்பாட்டம் ஆடவேண்டும் என்று பிரச்சனை செய்ததில் நான் சாமி ஊர்வலம் வந்த டிராக்டரின் முன்பகுதி நம்பர் பிளேட்டில் தவறி கீழே விழுந்து எனது முகத்தில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. கடந்த 09.05.2025ம் தேதி எனது தம்பியை ஆஜர் 1 வது எதிரி இரு சக்கர வாகனத்தில் மோதியதற்கு எவ்வித புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவத்தை மனதில் வைத்துக்கொண்டு இப்புகாரினை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தில் எனது தம்பியும் காயம்பட்டார் என்ற விபரத்தினை நான் எனது புகாரிலோ போலீசார் விசாரணையிலோ கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். ( சாட்சியிடம் புகார் காண்பிக்கப்பட்டு அவ்வாறு தான் கொடுத்த புகாரில் தனது தம்பிக்கு காயம் ஏற்பட்டதாக உள்ளதா என்று கேட்டபோது இல்லை என்று கூறுகிறார்). போலீசார்

என்னிடம் எத்தனை கையொப்பம் பெற்றனர் என்றால் ஒரு கையொப்பம் மட்டும் பெற்றனர். மீண்டும் போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 18.05.2025ம் தேதி அன்று விசாரித்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 16.05.2025 அன்றைய தினமே போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றனர் என்றால் சரிதான். நான் கொடுத்த வாக்குமூலத்தில் 18.05.2025 ம் தேதி என்னிடம் கையொப்பம் பெற்றதாக உள்ளது என்றால் சரியல்ல. நான் 16.05.2025 அன்றே வாக்குமூலம் அளித்து கையொப்பம் செய்துவிட்டேன். இவ்வழக்கில் நான் மட்டும் தான் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டேன் என்றால் சரிதான். சம்பவதினத்தின்று எனது தந்தை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இருட்டில், குடிபோதையில் தடுமாறி டிராக்டரில் விழுந்ததில் எனது முகத்தில் வெட்டுக்காயம் பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த கட்டையால் என்னை அடித்தார்கள் என்றால் எனக்கு எந்த கட்டை என்று சரியாக தெரியவில்லை. ஆஜர் எதிரிகளுக்கும் எங்கள் தெருவிற்கும் உள்ள சாதி பிரச்சனையை எனக்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி ஆஜர் 1 வது எதிரி அவர்கள் தெருவின் முக்கியஸ்தர் என்பதால் அவர்மீதும் மற்ற எதிரிகள் மீதும் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. யார் என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார் என்றால் ஆஜர் 1 வது எதிரி அருணாச்சலம் தான் என்னை அவ்வாறு மிரட்டினார்.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.02.16 17:28:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 245 /2025**

Preliminary Register

Deposition of **PW- 2 LW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அபிஷேக் | Father Name | : | கனகராஜ் |
| Village | : | உத்தமதானபுரம் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | 12ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறேன். |
| Religion | : | | Age | : | 17 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 16th day of February 2026.

1 முதல் 3எதிரிகள் ஆஜர். 1 முதல் 3எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து 12ம் வகுப்பு படித்துகொண்டிருக்கிறேன். அ.சா.1 எனது அண்ணன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது பக்கத்து தெருக்காரர்கள். கடந்த 09.05.2025ம் தேதி உத்தமதானபுரம் வடக்கு தெருவில் வைத்து எதிரி அருணாச்சலம் வண்டியை என்மீது மோதிவிட்டு நிற்காமல் சென்றுவிட்டார். அதை என் அண்ணனிடம் சொன்னேன். மறுநாள் அருணாச்சலம் செல்லியம்மன் கோவிலில் வரும்போது அ.சா.1 எதிரி அருணாச்சலமிடம் வண்டியில மோதிவிட்டு மன்னிப்பு கூட கேட்கவில்லை என்று கேட்டார். அப்போது மாலை 07.00 மணி இருக்கும். அதற்கு அவர் அப்படிதான்டா மோதுவேன் என்று கூறி குச்சிகாரி மகனே,

தேவிடியா மகனே என்று திட்டினார். அப்படியெல்லாம் திட்டக்கூடாது என்று கேட்டதற்கு ஒருநாள் இருக்குடா உங்களுக்கு என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். 15.05.2025 அன்று திருவிழா நடந்தது. 16.05.2025 மஞ்சள் நீராட்டு விழா நடந்தது. மஞ்சள் நீராட்டு விழா நடைபெற்ற அன்றைதினம் நள்ளிரவு 12.30 மணியளவில் உத்தமதானபுரம் ஆஜர் எதிரியின் தெருவில் சாமி ஏற்றி வந்த வாகனம் வரும்போது டீசல் இன்றி நின்றுவிட்டது. டீசலும் சாப்பாடும் வாங்கிக்கொண்டு நான் சென்றேன். சாப்பாடையும் டீசலையும் கொடுத்துவிட்டு சாமியின் முன்னால் நான் வந்துகொண்டிருந்தேன். அப்போது எதிரி அருணாச்சலம் என்னை குச்சிகாரி மகனே தேவிடியா மகனே என்று திட்டி எனது சட்டையை பிடித்தார். அருகில் இருந்த எனது அண்ணன் இதை கேட்டதற்கு கையில் வைத்திருந்த கத்தியால் எனது அண்ணனின் முகத்திலும் கையிலும் கீறினார். எனக்கு இடுப்பில் கீறல் விழுந்தது. கூட்டத்தில் யார் அதை செய்தார்கள் என்று தெரியவில்லை. மற்ற இரண்டு எதிரிகளும் கட்டையால் தாக்கியதில் எனது அண்ணனுக்கு வலது காலில் காயம் ஏற்பட்டது. என்னை எதிரிகள் கட்டையால் முதுகில் அடித்தார்கள். சத்தம் கேட்ட அருகில் இருந்த எனது அப்பா மற்றும் அண்ணன் வெற்றிவேல் வந்தவுடன் எதிரிகள் இன்றைக்கு தப்பித்துவிட்டீர்கள் என்னைக்கா இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிவிட்டு தப்பித்து ஓடிவிட்டார்கள். காயம்பட்ட எங்களுக்கு பாபநாசம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கா சேர்த்தார்கள். நான் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனது அண்ணன் அ.சா.1 அங்கு 1 வார காலம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

சம்பவத்தன்று நான் என்ன படித்துக்கொண்டிருந்தேன் என்றால் நான் 11 ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் 16 வயது இருக்கும். எத்தனை பேருக்கு நான் சாப்பாடு வாங்க சென்றேன் என்றால் சுமார் 5, 6 நபர்களுக்கு சாப்பாடு வாங்க சென்றேன். எத்தனை மணிக்கு

சாப்பாடு வாங்கி வந்தேன் என்றால் வேறொரு நபர் சாப்பாடு வாங்கி வந்தார் நான் ஆஜர் எதிரிகளின் தெருவிற்கு சென்று சாப்பாடு கொடுக்க மட்டும் சென்றேன். திருவிழா கமிட்டியர்கள் இருக்கும்போது நான் ஏன் சாப்பாடு வாங்கி சென்றேன் என்றால் எனது நண்பர் ஒருவர் டிரம்ஸ் அடித்துக்கொண்டிருந்தார் அதனால் அவருக்காக சாப்பாடு வாங்கி கொடுக்க சென்றேன். டீசல் மற்றும் 6 பேருக்கும் சாப்பாடு நான் தான் எடுத்துச் சென்றேன் என்றால் சரிதான். மேற்படி தகவலை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவத்தின்போது நானும் எனது அண்ணனும் மட்டும்தான் சம்பவயிடத்தில் இருந்தோம் என்றால் சரிதான். யார் வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. திருவிழா சமயத்தின்போது விளக்குகள் இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி விளக்குகளின் வெளிச்சத்தில் சம்பவயிடம் வெளிச்சமாக இருந்ததா என்றால் இருந்தது. சம்பவயிடத்தில் எங்கள் தெருவை சேர்ந்த எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 10 பேர் இருந்தார்கள். ஆஜர் எதிரிகளின் தெருவை சேர்ந்தவர்கள் 60, 70 பேர் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். எனது தெருக்காரர்கள் தப்பாட்டம் எங்கள் தெருவில் நடைபெறவேண்டும் என்று அங்கு இருந்தவர்களிடம் தகராறு செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி தகராறில் ஏற்பட்ட சண்டையில் எனது அண்ணனை யார் காயப்படுத்தினார் கள் என்று தெரியாது என்றால் சரியல்ல. ஆஜர் 1 வது எதிரிதான் காயப்படுத்தினார். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் சம்பவத்தினத்தன்று என்னை விசாரித்தார்கள் மற்றும் வேறொரு நாள் என்னை விசாரித்தார்கள். சம்பவதினத்தன்று போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் சரிதான். திருவிழாவின் போது எங்கள் தெருவினை சேர்ந்த பசங்களுக்கும் ஆஜர் எதிரிகளின் தெருவினை சேர்ந்த பசங்களுக்கும் இடையே பொதுவாக பிரச்சனை ஏற்படும் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தபோது எனது அப்பா வீட்டிலிருந்தாரா என்றால் இல்லை சம்பவயிடத்திற்கு சத்தம் கேட்டு வந்துவிட்டார். எனது அண்ணன் காயம்பட்டபிறகுதான் எனது அப்பா சம்பவயிடம் வந்தார் என்றார் சரிதான். பட்டியல்

சாட்சிகள் பாலு, குமரன், சரவணன் ஆகியோரும் எனது அண்ணன் காயம்பட்ட பிறகுதான் சம்பவயிடம் வந்தார்கள் என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் தேர் திருவிழாவின்போது சம்பவம் நடைபெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவத்தின்போது டீசல் மற்றும் சாப்பாடு வாங்கி வந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம்பற்றியும் நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டது பற்றியும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது அண்ணன் தானாக விழுந்து ஏற்படுத்திக்கொண்ட காயத்தினை ஆஜர் 1 வது எதிரி அருணாச்சலம் ஏற்படுத்தினார் என்று முன்விரோதம் காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் நானும் எனது அண்ணனும் மட்டும் இருந்தோம் என்று போலீசார் விசாரணையிலும் எனது அண்ணன் கொடுத்த புகாரிலும் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். எங்கள் ஊரை சேர்ந்த யாரும் அங்கு இல்லை. ஆஜர் எதிரியின் ஊரை சேர்ந்தவர்கள் சம்பவயிடத்தில் இருந்தார்கள்.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.02.16 17:28:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 245/2025**

Preliminary Register

Deposition of **PW- 3 LW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கனகராஜ் | Father Name | : | சாமிநாதன் |
| Village | : | உத்தமதானபுரம் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 16th day of February 2026.

1முதல் 3 எதிரிகள் ஆஜர். 1முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அசா.2 ஐ தெரியும். எனது மகன்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிகளைத் தெரியும். எனது பக்கத்து தெருக்காரர்கள். சம்பவ தேதிக்கு 4, 5 நாட்கள் முன்பாக எனது இளைய மகன் அ.சா.2 ஐ ஆஜர் எதிரி அருணாச்சலம் இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டு மன்னிப்பு கேட்காமல் சென்றுவிட்டார். கடந்த 16.05.2025 ம் தேதி நள்ளிரவு 12.30 மணியளவில் எனது மகன் அ.சா.2 டீசல் சாப்பாடு கொடுக்கச் சென்றபோது ஆஜர் 1 வது எதிரி அருணாச்சலம அவரை தகாத வார்த்தைகளால் பேசி அதை கேட்ட அ.சா.1 ஐ கையில் வைத்திருந்த ஆயுதத்தால் அ.சா.1 ன் கையிலும் முகத்திலும் கீறிவிட்டார். அ.சா.2க்கு இடுப்பில் கீறல் விழுந்தது. மற்ற எதிரிகள் அ.சா.1

மற்றும் அ.சா.2 ஐ கட்டையால் அடித்தனர். மகன்களின் சத்தம் கேட்டு சாமி அருகில் நின்றுகொண்டிருந்த நான் சென்றபோது எதிரிகள் குச்சிகாரி மகனே, தேவிடியா மகனே என்று தகாத வார்த்தைகளால் பேசி கொன்றுவிடுவதாக மிரட்டிவிட்டு ஓடி விட்டார்கள். நான் எனது மகன்களை பாபநாசம் மருத்துவமனையில் முதலுதவி செய்துகொண்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். அங்கு அ.சா.1 ஒரு வார காலம் சிகிச்சையில் இருந்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

எனது மகன்களுக்கு காயம் ஏற்பட்டு எதிரிகள் அங்கிருந்து ஓடிய பிறகுதான் நான் சம்பவயிடம் சென்றேன் என்றால் சரிதான். திருவிழா காலத்தில் எங்கள் தெருவை சேர்ந்த பசங்களுக்கும் ஆஜர் எதிரியின் தெருவை சேர்ந்த பசங்களுக்கும் இடையே பொதுவாக பிரச்சனை ஏற்படும் என்றால் சரிதான். குறிப்பாக கரகாட்டம், தப்பாட்டம் போன்ற நிகழ்ச்சிகளின்போது இரு தரப்பினை சேர்ந்த இளைஞர்களுக்கிடையே பிரச்சனை ஏற்படும் என்றால் சரிதான். அவ்வாறு நடந்த பிரச்சனையின்போது எனது மூத்த மகன் அ.சா.1 க்கு விபத்தில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் அன்றைய தினமே காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவத்தின்போது திருவிழா நடைபெற்றுக்கொண்டிருந்த விபரத்தினை போலீசார் விசாரணையில் நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் கடந்த 16.05.2025 ம் தேதி காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தனர். சம்பவத்தின்போது எனது இளைய மகனுக்கு 16 வயது தான் என்றால் சரிதான். எனது இளைய மகன் சாப்பாடு மற்றும் டீசல் வாங்கிக்கொண்டு அவர் மட்டும் ஆஜர் எதிரிகளின் தெருவிற்குள் சென்றாரா என்றால் அவர் மட்டும்தான் சென்றார் நாங்கள் மெயின் ரோட்டில் நின்று கொண்டிருந்தோம். நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே 200 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்தில் யார் யாருக்கு இடையே பிரச்சனை என்று தெரியாது என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தபிறகுதான் எனது இரு மகன்களும் காயம்

பட்டிருந்த விபரம் தெரியும் என்றால் சரிதான். ஆஜர் 1 வது எதிரிக்கும் எனது இளையே மகனுக்கும் இடையே இருந்த பிரச்சனையின் முன்விரோதம் காரணமாக இவ்வழக்கினை பொய்யாக ஆஜர் எதிரிகளின் மீது கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.02.16 17:28:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.